# ASSOCIATION OF UNIVERSITY TEACHERS (Regd.) TAMIL NADU

# 134, (Old No.68), Rama Lane, Nungambakkam, Chennai - 600 034. ☎ 2823 1797
E-mail: aut.generalsecretary@gmail.com, www.aut.org.in

President : **Dr. P. THIRUNAVUKKARASU,** Faculty of Electronics, SRMV College of Arts & Science, Covai - 641 020. Mob: 9842604549
General Secretary : **Prof. M. S. BALA MURUGAN,** Faculty of English, National College, Trichy - 620 001. Mob: 9443325242
Treasurer : **Dr. R. SARAVANAN,** Faculty of History, Pachaiyappa's College, Chennai - 600 030. Mob: 9444189447


மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 5-8-2021
தமிழ்நாடு அரசு,
சென்னை – 600 009.

அய்யா,

பொருள் : பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் , தமிழ்நாடு – தமிழக உயர்கல்வி – சட்டங்களும் சவால்களும் - தீர்வு கோருதல் - சார்பு.

வணக்கம்.

தமிழக மக்களின் அமோக ஆதரவுடன் திராவிட இயக்கப் பதாகையை உயர்த்திப்பிடிக்கின்ற வகையில், தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கும் தங்களுக்கு, பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், தமிழ்நாடு நெஞ்சார்ந்த வணக்கத்தையும், வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் பெருமையடைகிறது. தமிழகத்தில் தலையாய பிரச்சனையான 'கொரோனா தொற்றுப் பரவலை' தடுக்கின்ற சீரிய பணியில் கவனம் செலுத்திவரும் தங்களின் கரத்தினை வலுசேர்க்கும் வகையில், பல்கலைக்கழக ஆசிரியர் சங்க உறுப்பினர்கள் அனைவரும் தங்களின் ஒரு நாள் ஊதியத்தை 'முதல்வர் நிவாரண நிதிக்கு' அளித்துள்ளோம் என்பதனை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் (பதிவு)/தமிழ்நாடு (Association of University Teachers – (AUT) Tamil Nadu) 1946 - இல் சேலத்தில் தொடங்கப்பட்ட, தமிழகத்தின் முதல் பல்கலைக்கழக மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்கான தாய் மற்றும் முன்னோடி அமைப்பாகும். பின்நாட்களில், அரசு கல்லூரிகள் மற்றும் தென்மாவட்டங்களுக்கென ஆசிரியர் அமைப்புகள் உருவாக்கப்பட்டன. தற்பொழுது எமது சங்கம் சென்னைப் பல்கலைக்கழகம் சென்னை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம் வேலூர், பெரியார் பல்கலைக்கழகம் சேலம், பாரதியார் பல்கலைக்கழகம் கோயமுத்தூர், மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழகம் திருச்சிராப்பள்ளி ஆகிய பல்கலைக்கழகங்களின் எல்லைக்கு உட்பட்ட அரசு உதவிபெறும் கல்லூரிகள் (Aided Colleges ), சுயநிதிக் கல்லூரிகள் (Self - Finance Colleges), அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொழில் நுட்பக்கல்லூரிகள் (Government & Aided Engineering Colleges) மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது.

ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் ஆகியோர்களின் நலன் சார்ந்த பணியில், சமூக நீதி அடிப்படையிலான அனைவருக்கும் தரமான கல்வி என்ற சீரிய நோக்கில், பொருள் நிறைந்த ஆக்கப்பூர்வ தொடர்பணியில் ஈடுபட்டுள்ள "பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்,தமிழ்நாடு" தனது 75 –வது "பவளவிழா ஆண்டு" (1946 - 2021) நிறைவினை, நடப்பாண்டில் (2021) பெருமிதத்தோடு கொண்டாடவுள்ளது என்பதனையும் மகிழ்வுடன் இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.



Scanned with CamScanner

# ASSOCIATION OF UNIVERSITY TEACHERS (Regd.)
# TAMIL NADU

# 134, (Old No.68), Rama Lane, Nungambakkam, Chennai - 600 034. ☎ 2823 1797
E-mail: aut.generalsecretary@gmail.com, www.aut.org.in

dent : Dr. P. THIRUNAVUKKARASU, Faculty of Electronics, SRMV College of Arts & Science, Covai - 641 020. Mob: 9842604549
eral Secretary : Prof. M. S. BALA MURUGAN, Faculty of English, National College, Trichy - 620 001. Mob: 9443325242
surer : Dr. R. SARAVANAN, Faculty of History, Pachaiyappa's College, Chennai - 600 030. Mob: 9444189447


'கல்வி' என்பது உயர் சாதிகளுக்கென்றே ஒதுக்கீடு செய்யப்பட்ட தனி உரிமையாக இருந்த நிலையில், கிருத்துவ மிசினரிகளின் கல்விப் பரவலாக்குதல் கொள்கையினாலும், தமிழகத்தில், திராவிட இயக்க முன்னோடியான நீதிக்கட்சியின் உறுதியாலும், உயர்கல்வி பரவல் சுதந்திரத்திற்கு முன்பு இருந்த காலத்தில் சாத்தியப்பட்டது என்பது வரலாறு. சுதந்திரம் அடைந்த காலத்தில்; 'கல்வி வழங்குதல் அரசின் கடமை; கல்விப்பெறுதல் மக்களின் உரிமை' என்ற கொள்கையினாலும், அரசியல் சாசன வழிகாட்டு நெறிமுறைகளின்படியும் 'இலவச மற்றும் கட்டாய ஆரம்பக் கல்வி, ஐந்து வயது முதல் பதினான்கு வயதிற்கு உட்பட்ட ஆண்,பெண் குழந்தைகள் அனைவருக்கும் அளிக்கும் கொள்கையை மத்திய – மாநில அரசுகள் செயல்படுத்தின.

1967 – ஆம் ஆண்டிற்குப் பிறகு தமிழகத்தில் ஆட்சிப்பொறுப்பேற்ற திராவிட முன்னேற்ற கழக ஆட்சியும், ஆரம்ப, உயர்நிலைப்பள்ளி மற்றும் உயர்கல்விப் பரவலையும் தமிழ்வழிக் கல்வியையும் ஊக்கப்படுத்தின. மேற்காண் அனைத்து நடவடிக்கைகளிலும் திராவிட இயக்கத்தின் ஆதாரமாக விளங்கிய, 'தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டு கொள்கை'யும் அதனை உயிர் மூச்சாக நிறைவேற்றிடும் திராவிட இயக்க அரசியல் எழுச்சியும் இருந்தது என்பது யாரும் மறுக்க முடியாத உண்மையாகும்.

1980 – களுக்குப் பிறகு தேசிய அளவில் 'கல்விக் கொள்கையில்' ஏற்பட்ட மாறுபாட்டால் ' அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்கள்' என்ற நிலையில் மாற்றம் கொண்டு வரப்பட்டு, 'சுயநிதிக் கல்வி நிறுவனங்கள்' என்ற புதியவகை அமைப்புத் தோற்றுவிக்கப்பட்டது. இதன் நீட்சியாக கடந்த நாற்பதாண்டுகளில், அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கையைப் போன்று இரண்டு மடங்கு எண்ணிக்கையில் சுயநிதிக் கல்வி நிறுவனங்கள் தமிழகத்தில் தோன்றியுள்ளன என்பது உண்மை. இதன் விளைவாக

1. கல்வி வணிகமயமாக்கப்பட்டுள்ளது.
2. ஆசிரியர்களின் அறப்பணி தொழிற்பணியாக மாறியுள்ளது.
3. கல்வி நிறுவனங்களை ஒழுங்குபடுத்தும் (Regulating) பணியினைச் செய்யவேண்டிய அரசு முகமைகள், செயலற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.
4. நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் ஏட்டளவில் மட்டுமே உள்ளன.

தமிழகத்தில் உயர்கல்வி பரவலாக்கப்பட்டிருப்பதை, அகில இந்திய சராசரி அளவைக் காட்டிலும் அதிக அளவாக 44% உயர்கல்வியில் சேருவோர் எண்ணிக்கை இருப்பது பெருமைக்குரியதாக இருப்பினும், மற்றொருபுறம் கடந்த ஓராண்டிற்கு மேலான 'கொரோனா' தொற்று காலத்தில், சுயநிதிக் கல்வி



Scanned with CamScanner

நிறுவனங்களில், 'ஆசிரியர்களாக' பணிசெய்துகொண்டிருந்த பலரின் தற்போதைய வேதனை நிலைகள் அனைவரும் அறிந்ததே. தமிழ்நாடு தனியார் பள்ளிகள் சட்டம், 1973 மற்றும் தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் ஒழுங்காற்றுச் சட்டம்,1976. ஆகியவை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு வழங்க வேண்டிய உரிய பாதுகாப்பினை, மேற்காண் சட்டங்கள் வழங்கவில்லை என்பது கள உண்மையாகும். எனவே, மேற்காண் சட்டங்களில் உரிய திருத்தத்தினை விரைவில் கொண்டு வருதல் காலத்தின் கட்டாயமாகும்.

தமிழ்நாடு கல்வி நிறுவனங்களில் கட்டாய நன்கொடை தடைச்சட்டம் , 1991. நிறைவேற்றப்பட்டு அதன் விதிமுறைகள் 1997 - இல் வகுக்கப்பட்டு, 25 ஆண்டுகளுக்கு மேலாகியும், 'கல்வி நிறுவனங்களில் கட்டாய நன்கொடை வசூல்' என்பது இன்று வரை தடுக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல; 'சமூகப் புற்றுநோயாக அது மாறிக்கொண்டிருக்கிறது என்பதும் கசப்பான உண்மையாகும்.

அரசு உதவிபெறும் மற்றும் சுயநிதி கலை அறிவியல் கல்லூரிகளில் 'ஒற்றைச் சாளர முறையில்' (Single Window System) 'மாணவர் சேர்க்கையினை' உறுதிசெய்யும் பொருட்டும், பெற்றோர் மற்றும் மாணவர்களை கட்டாய நன்கொடை என்ற ஆபத்திலிருந்து காக்கும் பொருட்டும், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் அறிவுக் குழந்தையாக வெளியிடப்பட்ட அரசாணையை ஆதிக்கச் சக்திகளின் சதியோடு 'கல்வி வணிகக்குழுக்கள்' நீதிமன்ற தடையாணை பெற்றது மட்டுமல்லாமல், உச்சநீதிமன்ற மேல் முறையீட்டிற்கு செல்வதற்குக்கூட அன்றைய கலைஞரின் அரசு, சென்னை உயர்நீதிமன்றத்தினால் தடுக்கப்பட்டது என்பதும் நாம் அறிய வேண்டிய ஒன்றாகும். இதன் விளைவாக, உயர்கல்வி வணிகமயமாக்கப்படுவதை தடுக்க இயலாத ஒரு ஆபத்தான சூழல் உருவாகியுள்ளதை மறுக்கமுடியாது.

ஆண்டுதோறும் மேல்நிலைப்பள்ளி பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்ட பத்து நாட்களுக்குப் பிறகு, மாணவர் சேர்க்கையினைத் தொடங்க வேண்டும் என்றும், சுயநிதிப் பாடப்பிரிவுகளுக்கு முன்பு அரசு உதவிபெறும் பாடப்பிரிவுகளுக்கான மாணவர் சேர்க்கையினை நடத்திட வேண்டும் என்றும் ஒவ்வொரு பாடப்பிரிவுகளுக்குமான கல்விக் கட்டணம் உள்ளிட்ட அனைத்துக் கட்டணங்களையும் மாணவர் கையேட்டில் (Prospectous) வெளியிட வேண்டுமென்றும், அரசு நிர்ணயித்துள்ள சேர்க்கை விண்ணப்பக்கட்டணம் உள்ளிட்ட கட்டணங்களைத் தவிர வேறு அரசின் அனுமதிப் பெறாத கட்டணங்கள் எதுவும் வசூலிக்கக்கூடாது என்றும், 'கலை அறிவியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை விதிமுறைகள்' அடங்கிய அரசாணை ஆண்டுதோறும் அரசு உயர்கல்வித்துறையினால் வெளியிடப்படுவதும், இவ்வரசாணையின் எந்த விதிமுறைகளையும் அரசு உதவிபெறும் மற்றும் சுயநிதிக் கல்லூரிகள் பின்பற்றுவதில்லை என்பதும், விதி மீறல்கள் குறித்த புகார்களை 'விசாரிக்கும் முகமை' தற்போது இல்லை என்பதும் வருத்தத்திற்குரியதாகும். மாணவர் சேர்க்கை விதிமுறைகள் குறித்த அரசாணை, அரசு உதவிபெறும் தனியார் மற்றும் சுயநிதிக் கலை அறிவியல் கல்லூரிகள், தங்களின் மாணவர் சேர்க்கையினை முழுமையாக முடித்த காலத்திற்குப் பிறகே அரசாணை வெளியிடப்பட்டிருப்பதும் இதில்



Scanned with CamScanner

**ASSOCIATION OF UNIVERSITY TEACHERS (Regd.)**
**TAMIL NADU**
# 134, (Old No.68), Rama Lane, Nungambakkam, Chennai - 600 034. ☎ 2823 1797
E-mail: aut.generalsecretary@gmail.com, www.aut.org.in

ent : **Dr. P. THIRUNAVUKKARASU,** Faculty of Electronics, SRMV College of Arts & Science, Covai - 641 020. Mob: 9842604549
al Secretary : **Prof. M. S. BALA MURUGAN,** Faculty of English, National College, Trichy - 620 001. Mob: 9443325242
rer : **Dr. R. SARAVANAN,** Faculty of History, Pachaiyappa's College, Chennai - 600 030. Mob: 9444189447

நடந்துள்ள நகைமுரணாகும்.அரசின் விதிமுறைகளின்படி அனைத்து விதிகளையும் பின்பற்ற வேண்டிய கட்டாயச்சூழலில் உள்ள அரசுக் கல்லூரிகள் 'தரம் தாழ்ந்தவையாக' கருதப்பட்டு, ஊடக வெளிச்சத்தில் ஒதுக்கப்படுகின்ற சூழல் இருப்பதும் உண்மை.

1996 - இல் ஆட்சிப்பொறுப்பேற்ற முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞரின், கட்டாய நன்கொடை தடைச்சட்டம் 1991 – க்கு விதிமுறைகளை வகுத்து வெளியிட்டதும், ஒற்றைச் சாளர முறை மாணவர் சேர்க்கையினை நடைமுறைப்படுத்த அரசாணை வெளியிட்டதும், அதனைத் தொடர்ந்து, தமிழகத்திலுள்ள அரசு, அரசு உதவிபெறும் மற்றும் சுயநிதி கலை அறிவியல் கல்லூரிகளில் நடத்தப்பெற்று வரும் இளங்கலை/முதுகலைப் பாடப்பிரிவுகளுக்கு மாணவர்கள் செலுத்த வேண்டிய கல்விக் கட்டணங்களை இறுதி செய்து, அதனை அரசாணை எண் 265/13.05.1997. ஆக வெளியிட்டு உயர்கல்வி வணிகமயத்தினை தடுக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

கலைஞர் அவர்களால் வெளியிடப்பட்ட மேற்காண் அரசாணை இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படாமல் ஏட்டளவில் உள்ளது என்பதும், கலை அறிவியல் கல்லூரிகளில் கட்டணங்களை நிர்ணயித்திட 'கலை அறிவியல் கல்விக்கட்டண நிர்ணய குழு" அமைத்திட வேண்டிய தேவையும், அவசியமும் தற்போது ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாடு தனியார் கல்லூரி ஒழுங்காற்றுச் சட்டம், 1976 மற்றும் அதன் விதிகளில், தனியார் கல்லூரி 'மாணவர் சேர்க்கை என்பதை கல்லூரி முதல்வரின் அதிகாரத்திற்கு உட்பட்டது' என்று கூறப்பட்டிருப்பதைச் சாதகமாக்கிக் கொண்டுள்ள கல்வி வணிகக்குழுக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் நலன்களுக்கு எதிராகத் தொடர்ந்து 'கட்டாய வசூலில்' ஈடுபட்டு வருவதின் மீது கல்லூரிக் கல்வி இயக்குநரகம் நடவடிக்கை எடுக்கமுடியாத சூழலில் இருப்பதும் பொது மக்களின் வேதனைத் தொடர்வதும் தற்போதைய நிலையாகும்.

அரசு முகமைகளின் நடவடிக்கைகளிலிருந்து நீதிமன்ற தலையீட்டினால் தப்பித்துக் கொள்கின்ற கல்வி வணிகக்குழுக்கள், அரசு உதவிபெறும் பாடப்பிரிவுகளையும், அரசு உதவிபெறும் கல்லூரிகளையும் சட்டத்திற்குப் புறம்பாக "மூடி" (Closing) சுயநிதிப் பாடப்பிரிவுகளாகவும் /கல்லூரிகளாகவும் மாற்றுகின்ற செயல்களில் ஈடுபட்டு வருகின்றன. தமிழ்நாடு தனியார் கல்லூரி ஒழுங்காற்றுச் சட்டம் 1976 பிரிவு 25 - இன் படி, 'பாடப்பிரிவுகள்/ கல்வி நிறுவனங்களை, உரிய அதிகாரிகளின் ஆணைகளின்றி மூடக்கூடாது' என்று தெளிவாக வரையறை செய்திருந்தும்கூட, தேசியக்கல்லூரி திருச்சிராப்பள்ளி, ஏ.எம்.ஜெயின் கல்லூரி சென்னை, சி.பி.எம்.கல்லூரி கோயமுத்தூர் உள்ளிட்ட பல அரசு உதவிபெறும் கல்லூரிகள் பல்வேறு அரசு உதவிபெறும் பாடப்பிரிவுகளை 'மூடியுள்ளன' என்பது உண்மை. கல்லூரிக் கல்வி இயக்குநரால் ஏற்பளிப்பு



Scanned with CamScanner

ASSOCIATION OF UNIVERSITY TEACHERS (Regd.)
TAMIL NADU
# 134, (Old No.68), Rama Lane, Nungambakkam, Chennai - 600 034. ☎ 2823 1797
E-mail: aut.generalsecretary@gmail.com, www.aut.org.in

President : Dr. P. THIRUNAVUKKARASU, Faculty of Electronics, SRMV College of Arts & Science, Covai - 641 020. Mob: 9842604549
General Secretary : Prof. M. S. BALA MURUGAN, Faculty of English, National College, Trichy - 620 001. Mob: 9443325242
Treasurer : Dr. R. SARAVANAN, Faculty of History, Pachaiyappa's College, Chennai - 600 030. Mob: 9444189447

வழங்கப்பட்ட ஆசிரியர் காலிப்பணியிடங்களை 'நிரப்பாமல்' நிர்வாக நியமனங்களைச் செய்து, அரசுஉதவிபெறும் கல்லூரியை, சுயநிதிக் கல்லூரியாக மடைமாற்றம் செய்து வருகின்ற சென்னை துரைப்பாக்கம் டி.பி.ஜெயின் கல்லூரி நிர்வாகத்தின் மீது அரசு முகமைகள் இதுநாள் வரை எந்த நடவடிக்கையினையும் எடுக்கவில்லை என்பதும் வேதனைக்குரிய உண்மையாகும்.

மற்றொருபுறம், தமிழகத்திலுள்ள 163 அரசு உதவிபெறும் தனியார் கல்லூரிகளில் உள்ள ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களின் காலிப்பணியிடங்களை நிரப்புதலில் 'வியாபார நோக்கம்' மட்டுமே தலையாய கொள்கையாக கல்வி வியாபாரக்குழுக்கள் பின்பற்றின என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும்.

மேற்காண் ஒழுங்காற்றுச் சட்ட விதிகளின்படி, 'கல்லூரி நிர்வாக முகமை' யில் ஏற்பட்ட குளறுபடியால், 'சிறப்பு அலுவலர்' (Special Officer) நியமனம் மற்றும் 'கல்லூரியை அரசே ஏற்று நடத்துதல்' (Take Over) ஆகிய பிரிவுகளுக்கு உண்டான காலக்கெடு முடிந்தும் (2+10ஆண்டுகள்), உச்சநீதிமன்றம், 'கல்லூரி நிர்வாகம் இல்லாத சூழலில், இக்கல்லூரி அரசின் சொத்து' என்று தீர்ப்பளித்தப் பிறகும் 'கல்லூரி நிர்வாகக்குழுவின் தலைவர்/ செயலர்' போல கோவை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர், சிக்கய்ய நாயக்கர் கல்லூரி ஈரோடு விவகாரத்தில் செயல்பட்டு வருவது தற்போதைய காட்சி முரண்பாடாகும்.

1984 - ஆம் ஆண்டிற்குப்பிறகு, 'புதிய அரசு உதவிபெறும் கல்லூரிகளுக்கோ அல்லது ஏற்கனவே செயல்பட்டு வரும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் அரசு உதவிபெறும் புதிய பாடப்பிரிவுகளுக்கோ அரசின் அனுமதியில்லை' என்ற அரசின் கொள்கை முடிவினைத் தொடர்ந்து, 'புற்றீசல்' போல தமிழகத்தில் கடந்த 35 ஆண்டுகளில் தோன்றியுள்ள சுயநிதிக் கல்லூரிகளில் அரசின் இடஒதுக்கீடு உள்ளிட்ட எந்த விதிமுறைகளும் பின்பற்றப்படவில்லை என்பதும் கள நிலவரம்.

2003 ஆம் ஆண்டில், தமிழகத்திலுள்ள 69 (அன்றைய கணக்கு) அரசுக் கல்லூரிகளை அந்தந்த பகுதியிலுள்ள 'மாநிலப் பல்கலைக்கழகங்களின், உறுப்புக் கல்லூரிகளாக' மாற்றியதை எதிர்த்து நடந்த ஆசிரியர்கள் போராட்டத்தின் விளைவாக, அம்முயற்சி கைவிடப்பட்டு, புதிய அரசுக் கல்லூரிகளுக்குப் பதிலாக, 'பல்கலைக்கழக உறுப்புக்கல்லூரிகள்' என்று கடந்த 15 ஆண்டுகளில் 44 உறுப்புக்கல்லூரிகள் தொடங்கப்பெற்று, அதில் 41 உறுப்புக்கல்லூரிகளை 2019 மற்றும் 2020 – ஆம் ஆண்டுகளில் புதிய அரசுக் கல்லூரிகளாக உருவாக்கப்பட்டு தற்போது 150 அரசுக் கல்லூரிகள் தமிழகத்தில் உள்ளன.



Scanned with CamScanner

# ASSOCIATION OF UNIVERSITY TEACHERS (Regd.) TAMIL NADU

# 134, (Old No.68), Rama Lane, Nungambakkam, Chennai - 600 034. ☎ 2823 1797
E-mail: aut.generalsecretary@gmail.com, www.aut.org.in

sident : **Dr. P. THIRUNAVUKKARASU,** Faculty of Electronics, SRMV College of Arts & Science, Covai - 641 020. Mob: 9842604549
eral Secretary : **Prof. M. S. BALA MURUGAN,** Faculty of English, National College, Trichy - 620 001. Mob: 9443325242
asurer : **Dr. R. SARAVANAN,** Faculty of History, Pachaiyappa's College, Chennai - 600 030. Mob: 9444189447


மேனாள் உறுப்புக்கல்லூரிகள், அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசுப் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில், நிரந்தரப் பணியிடங்களில் கவுரவ விரிவுரையாளர்கள்/ மணிநேர விரிவுரையாளர்கள்/ பெற்றோர் ஆசிரியர் கழகம் சார்ந்த விரிவுரையாளர்கள் மற்றும் அலுவலர்கள் ஆகியோரின் நியமனங்களால் 'மட்டுமே' நிறைந்துள்ளன என்பதும், இவ்வாசிரியர்கள் - அலுவலர்களுக்கு ரூபாய் 5,000 முதல் ரூபாய் 20,000 வரை மட்டுமே மாத ஊதியமாக வழங்கப்படுகின்றன என்பதும் தற்போதைய நிலையாகும்.

1857 - இல், காலனி ஆட்சியாளர்களால் தொடங்கப்பட்ட சென்னைப்பல்கலைக்கழகம் மற்றும் 1929 - இல் துவக்கப்பட்ட, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகிய இரண்டு உயர்கல்வி நிறுவனங்கள் தமிழக உயர்கல்வியின் அடையாளங்களாகும். 1965 - இல் சென்னைப் பல்கலைக்கழகத்திலிருந்து பிரிக்கப்பட்ட மதுரை (காமராசர்) பல்கலைக்கழகத்தினைத் தொடர்ந்து, 1982 - இல் திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் மற்றும் கோயமுத்தூர் பாரதியார் ஆகிய இரண்டு பல்கலைக்கழகங்கள் துவக்கப்பட்டன.தஞ்சை தமிழ்ப்பல்கலைக்கழகம், கொடைக்கானல் அன்னை தெரசா, காரைக்குடி அழகப்பா, நெல்லை மனோன்மணியம் சுந்தரனார், சேலம் பெரியார், மற்றும் வேலூர் திருவள்ளுவர் ஆகிய பல்கலைக்கழகங்கள் உள்ளிட்டவை சேர்த்து, தற்போது 12 கலை அறிவியல் சார்ந்த பொதுப் பல்கலைக்கழகங்கள் தமிழகத்தில் உள்ளன. தொழில் சார்ந்த (Professional) பல்கலைக்கழகங்கள், 1971 - இல் கோயமுத்தூர் வேளாண்மைப் பல்கலைக்கழகம் உள்ளிட்ட, கால்நடை, தொழில்நுட்பம், மீன்வளம், சட்டம் மற்றும் மருத்துவம் ஆகிய தொழில்சார் பல்கலைக்கழகங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

தமிழகப்பல்கலைக்கழகங்களின் கடந்த 10 ஆண்டு வரலாற்றினை ஆராய்ந்து பார்த்தால், கீழ்க்காணும் விபரங்களை நாம் உணர முடியும்.

1. துணைவேந்தர்கள் 'தேடுதல் குழு' அமைப்பதில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசின் அதிகாரம் பின்னுக்குத்தள்ளப்பட்டு, "வேந்தரின்" 'அதிகாரத்தின் அடிப்படையில்' மட்டுமே அமைக்கப்பட்டன.
2. துணைவேந்தர்கள் "தேடுதல் குழு" வின் அமைப்பாளராக, தமிழகத்தினை சாராதவர்கள் நியமிக்கப்பட்டனர்.
3. துணைவேந்தர்கள் நியமனம் என்பது, 'ஆளுநர்' இறுதி முடிவினைப்பொறுத்ததாக அமைந்தது.
4. தமிழகத்தினை சாராதவர்கள் துணைவேந்தர்களாக நியமனம் செய்யப்பட்டனர்.
5. 69% இடஒதுக்கீட்டுக் கொள்கைக்கு முரணாக/ எதிராக 'ஆளுநர் மாளிகை' ஆதரவுடன் பல்கலைக்கழகங்களின் செயல்பாடுகள் அமைந்தன.
6. ஒரு குறிப்பிட்ட அரசியல் மற்றும் கலாச்சாரக் கொள்கையினை பின்பற்றுபவர்கள் மட்டுமே "வேந்தரின் பிரதிநிதிகளாக" ஆட்சிக்குழு உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டு, " மாறுபட்ட சிந்தனைத் திணிப்புகள்" பல்கலைக்கழகத்திற்குள் புகுந்துள்ளன.

Scanned with CamScanner

**ASSOCIATION OF UNIVERSITY TEACHERS (Regd.)**
**TAMIL NADU**
# 134, (Old No.68), Rama Lane, Nungambakkam, Chennai - 600 034. ☎ 2823 1797
E-mail: aut.generalsecretary@gmail.com, www.aut.org.in

President : **Dr. P. THIRUNAVUKKARASU,** Faculty of Electronics, SRMV College of Arts & Science, Covai - 641 020. Mob: 9842604549
General Secretary : **Prof. M. S. BALA MURUGAN,** Faculty of English, National College, Trichy - 620 001. Mob: 9443325242
Treasurer : **Dr. R. SARAVANAN,** Faculty of History, Pachaiyappa's College, Chennai - 600 030. Mob: 9444189447

7. பல்கலைக்கழகச் "சட்டங்களில்" மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசின் "முதல்வர்களே, பல்கலைக்கழக வேந்தர்களாக" செயல்படும் வகையிலும், "பொறுப்பில்லாத அதிகாரங்களை" 'பெயரளவுக்கு மட்டுமே' உபயோகிக்க வேண்டியர்கள், முழுமையாக உள்நோக்கோடு பயன்படுத்தி வருவதை தடுப்பது உள்ளிட்ட – உரிய சட்டத்திருத்தங்களைக் கொண்டுவருதல் அவசரம் மட்டுமல்ல; தற்போதைய அவசியமும் ஆகும்.

மேற்காண் அனைத்து பிரச்சனைகளிலும் நிலவியுள்ள களநிலவரங்களை ஆதாரத்தோடு, மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர், கல்லூரிக் கல்வி இயக்குநர், உயர் கல்வித்துறைச் செயலர், பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் மற்றும் அரசுக்கும், கோரிக்கை மனுக்களைச் சமர்ப்பித்தும் மாநில அளவிலான பிரச்சனைகளுக்கு ஆய்வு/ கருத்தரங்கம் மற்றும் ஊடகங்கள் வாயிலாகவும் அரசின் கவனத்தை ஈர்க்கும் முகமாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. மேற்காண் உயர்கல்வி சார்ந்த சவால்களை, தங்களின் மேலான நேரடிக் கவனத்திற்கு, உரிய தீர்வுகளை எதிர்நோக்கி கொண்டு வருவதில் எமது சங்கம் பெருமை கொள்கிறது.

நன்றி. வணக்கம்.

இப்படிக்கு

எம்.எஸ்.பாலமுருகன்,
பொதுச் செயலாளர்,
பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்,
தமிழ்நாடு.



Scanned with CamScanner